**DVC. 1 of 2023** **Previous Date : 24.01.2025**

**RW1**

**சக்கரவர்த்தி ரமணி சங்கர் த/பெ.சுப்பிரமணியன்**

**04.09.2025**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 04.09.2025.**

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1. எனது அப்பா என்ன செய்கிறார் என்றால் LIC Agent ஆக இருக்கிறார். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் Electrician உதவியாளராக வேலை செய்து வருகிறேன். யாரிடம் உதவியாளராக வேலை செய்கிறேன் என்றால் சிராஜ்பாய் என்பவரிடம் வேலை செய்கிறேன். நான் Electrician உதவியாளராக வேலை செய்கிறேன் என்று எதிர்உரையிலும், எனது நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் நான் எதிர்உரை தாக்கல் செய்யும்போது சென்னையில் வேலை செய்தேன், நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் Diplomo Mechanical Engineering படித்துள்ளேன். DME படித்தால் மின்சார வயரிங் வேலைகள் செய்யலாம் என்றால் சரிதான். நான் மேற்படி சிராஜ்பாய் என்பவரிடம் எத்தனை வருடங்களாக உதவியாளராக இருக்கிறேன் என்றால் ஒன்றரை வருடங்களாக இருக்கிறேன். நான் சிராஜ்பாயிடம் வேலை செய்கிறேன் என்று காட்டுவதற்கு எந்த ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். Helper ஆக வேலை செய்வதற்கு எவ்வளவு சம்பளம் என்றால் ஒரு நாளைக்கு ரூபாய் 500/-. நான் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் நான் DME படித்துவிட்டு சிராஜ்பாயிடம் வேலை செய்யவில்லை என்றாலும் சரியல்ல.**

**2. திருமண மண்டபத்தில் திருமணம் நடந்தபோது மனுதாரர் வீட்டில் இருந்துதான் அனைத்து செலவுகளும் செய்தார்கள் என்றால் சரியல்ல, நாங்கள் தான் செய்தோம். எவ்வளவு செலவு செய்தோம் என்றால் ரூபாய் 7,00,000/- நாங்கள் செலவு செய்தோம். ரூபாய் 7,00,000/- செலவு செய்யும் அளவுக்கு அப்போது என்ன வருமானம் இருந்தது என்றால் வீட்டை பாகம் பிரித்து எனது பாகத்தை விடுதலை எழுதி கொடுத்து பணம் பெற்றேன். நான் எந்த விடுதலை பத்திரமும் நான் சொன்னது போல் எழுதி கொடுக்கவில்லை என்றாலும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்பு**

வேண்டுமென்றே எனது தம்பி பெயரில் எழுதிக் கொண்டேன் என்றாலும் சரியல்ல. 2015 ல் நான் எழுதி கொடுத்துவிட்டேன். 2015 ல் உள்ள ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. திருமணம் முடிந்த பின்பு நாங்கள் எங்கு குடியிருந்தோம் என்றால் உடுமலைபேட்டையில் குடியிருந்தோம். உடுமலைபேட்டையில் எந்த தெருவில் குடியிருந்தோம் என்றால் சிவசக்தி காலணியில் குடியிருந்தோம். எவ்வளவு நாட்கள் சிவசக்தி காலணியில் குடியிருந்தோம் என்றால் 2015 செப்டம்பர் முதல் 2016 ஏப்ரல் வரை குடியிருந்தோம். உடுமலைபேட்டையில் என்ன வேலை செய்தேன் என்றால் எனது சித்தப்பா வைத்திருந்த தங்கமயில் டிராவல்ஸ் என்ற கம்பெனியில் மேற்பார்வையாளராக வேலை செய்தேன். பாகப்பிரிவினை விடுதலை மூலம் ரூபாய் 7 லட்சம் வந்தது என்று சொல்லியுள்ளதில் அவ்வளவு தான் என்னுடைய பணம் என்றால் சரிதான். அந்த பணம் மண்டப செலவுக்கு சரியாக போனது என்றால் மண்டபம், சாப்பாடு, நகை, டிரஸ் செலவு ஆனது.

3. நிரூபண வாக்குமூலத்தில் உடுமலைபேட்டையில் குடியிருந்தபோது மனுதாரர் தனது தகப்பனாருக்கு பணம் கேட்டு பிரச்சனை செய்தார் என்று சொல்லியுள்ளதில் அது சம்மந்தமாக பெரியவர் மூலம் பேசினேனா என்றால் ஆமாம், எனது சித்தப்பா, அத்தை, எனது தாயார் மூலம் பேசினேன். எனது சித்தப்பா எனக்கு எவ்வளவு சம்பளம் கொடுத்தார் என்றால் ரூபாய் 10000/- கொடுத்தார். அப்போது வீட்டு வாடகை எவ்வளவு என்றால் ரூபாய் 4000/-. இந்த 10000/- ரூபாய் ஒரு குடும்பத்தின் செலவுகளுக்கே போதுமானதாக இல்லை என்பதால் மனுதாரர் ஆடம்பர செலவு செய்தார் என்று நிரூபண வாக்குமூலத்தில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது சித்தப்பாவிடம் வேலை செய்யவில்லை என்றாலும் இந்த வழக்கில் 5 வது எதிர்மனுதாரராக உள்ள எனது சித்தப்பாவிடம் பயண டிக்கெட் புக் செய்து டிராவல்ஸ் தொழிலில் பங்குதாரராக இருந்தேன் என்றாலும் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் மனுதாரர் கையில் கிடைத்த பொருளை வைத்து அடித்து காயப்படுத்தினார் என்று சொல்லியுள்ளதில் அதில் என்ன தேதி என்றால் அவ்வபோது நடந்தது கடைசியாக 06.08.2016 ம் தேதி நடந்தது. அவ்வாறு காயம்பட்டவுடன் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் ஆமாம். எந்த மருத்துவமனைக்கு

சென்றேன் என்றால் வேல் மருத்துவமனைக்கு சென்றேன். எதற்காக உடுமலைபேட்டையில் சண்டை நடந்ததற்கு பழனியில் சிகிச்சை பெற்றேன் என்றால் அப்போது பழனியில் குடியிருந்தோம். மனுதாரர் அக்கா பிள்ளைகளுக்கு பரிசு பொருள் கொடுப்பார் என்று சொல்லியுள்ளதில் என்ன பொருள் என்றால் செல்போன், சைக்கிள் வாங்கி கொடுக்க வேண்டும் என்று கேட்டார். மனுதாரர் அடித்து காயப்படுத்தியதாக சொல்லியுள்ளதில் அதற்கு பிறகு சேர்ந்து வாழவில்லை என்றால் சரிதான். அடித்து காயப்படுத்தியதாக சொல்லியுள்ளதில் போலிசாரிடம் ஏன் புகார் கொடுக்கவில்லை என்றால் அது என் குடும்பவிசயம். நான் சொன்னது போல் அடித்த சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் அவ்வாறு நடந்திருந்தால் வேல் மருத்துவமனை சான்றிதழை இந்த வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல.

4. பழனியில் எங்கு, எப்போது குடியிருந்தோம் என்றால் இட்டேரி ரோட்டில் ஏப்ரல் 2016 முதல் செப்டம்பர் 2016 வரை குடியிருந்தோம். பழனியில் வாடகை வீட்டில் குடியிருந்தோமா என்றால் ஆமாம். எவ்வளவு வாடகை என்றால் ரூபாய் 4000/– வாடகை. பழனியில் என்ன தொழில் செய்தேன் என்றால் பழனியில் இருக்கும்போதும் உடுமலையில் சித்தப்பாவிடம் வேலை செய்தேன். LIC முகவராகவும் இருந்தேன். LIC முகவராக எவ்வளவு பணம் வந்தது என்றால் ஆறு மாத காலம் மட்டும் தான் Agent ஆக இருந்தேன். அப்போது 8000/– கிடைத்தது. எத்தனை நபர்களிடம் LIC Policy பிடித்தேன் என்றால் 8 நபர்களிடம் பிடித்தேன். மாதம் 8000/– என்பது எனது கமிஷன் என்றால் முதல் மாதம் 8000/– வந்தது, அதற்கு பிறகு அந்த தொழிலை செய்யவில்லை. நான் அந்த தொழிலை செய்யாதபோதும் நான் பிடித்து கொடுத்த Policy தாரர் பணம் செலுத்தினால் எனக்கு பணம் வரும் என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. 9 வருடங்கள் ஆகிவிட்டது. எனது சகோதரர் 3ம் எதிர்மனுதாரர் என்ன செய்கிறார் என்றால் தற்போது Deputy Tasildar ஆக வேலை செய்கிறார். என்னை அடித்ததாக சொல்வது உடுமலைபேட்டையிலா அல்லது பழனியிலா என்றால் பழனியில் வைத்து. பழனியில் மனுதாரர் வேறு எதுவும் தொந்தரவு செய்யவில்லை என்றால் அவருடைய போக்கில் நான் அனுசரித்து சென்றேன். பழனியில் வந்து மனுதாரர் ஆடம்பரம் எதுவும் செய்யவில்லை என்றால் நான் கட்டுபாட்டுடன் வைத்திருந்தேன். ஆடம்பரம் என்று சொல்வது என்ன என்றால் தனது அக்கா மகனை படிக்க வைக்க கட்டணம் செலுத்த வேண்டும் என்றும், டீ கடை வைப்பதற்கு முதலீடு

வேண்டும் என்றும் கேட்டார். மேற்படி கேட்டதாக சொல்வதை நான் கொடுத்தேனா என்றால் இல்லை. மனுதாரர் நான் சொல்வதுபோல் பணம் எதுவும் கேட்கவில்லை என்றாலும் ஆடம்பர செலவு எதுவும் செய்யவில்லை என்றாலும் ரூபாய் 10000/– சம்பளத்தில் எந்த ஆடம்பர செலவும் செய்ய முடியாது என்றாலும் சரியல்ல.

5. பாக விடுதலை மூலம் எனக்கு வந்தது ரூபாய் 7 லட்சம் மட்டும் தான் என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் 15 பவுன் நகைகளை மனுதாரருக்கு கொடுத்தேன் என்று சொல்லியுள்ளதில் எந்த பணத்தில் இருந்து கொடுத்தேன் என்றால் எனது தாயார் பணம் சேர்த்து வைத்து என்னிடம் கொடுத்த பணம். அந்த 15 பவுன் நகை என்ன என்றால் 5 பவுன் தாளிக்கொடி, அரை பவுன் மாங்கல்யம், வளையல் 4 பவுன், மீதி மோதிரம், ஜிமிக்கி, கம்மல். மொத்தம் 15 பவுன். நான் கொடுத்ததாக சொல்லும் 15 பவுன் மனுதாரரிடம் இருக்கிறது என்று மகளிர் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் சண்டையின் போது அந்த 15 பவுன் நகையை என்னிடம் திருப்பி கொடுத்துவிட்டு போய்விட்டார். நான் கொடுத்ததாக சொல்லும் 15 பவுன் நகை மனுதாரரிடம் இல்லை என்றால் சரிதான், திருப்பி கொடுத்துவிட்டார். 17.12.2015ம் தேதி மனுதாரர் பெற்றோர் வீட்டிற்கு நானும், மனுதாரரும் சென்றபோது டீ கடை வைக்க மனுதாரரின் சகோதரர் பணம் கேட்டதாகவும், தரக்குறைவான வார்த்தைகளால் திட்டியதாகவும் அதனால் நெய்காரப்பட்டிக்கு போய்விட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அதற்கு பிறகு நான் நெய்காரப்பட்டியில் தான் இருந்தேன் என்றால் அன்று நெய்காரப்பட்டியில் எனது அம்மா வீட்டில் இருந்துவிட்டு அதற்கு பிறகு உடுமலைபேட்டைக்கு வேலைக்கு சென்றுவிட்டேன். நான் மனுதாரரின் பெற்றோர் வீட்டில் இருந்து செல்லும்போது பர்ஸ், Tab ஆகியவற்றை விட்டுவிட்டு சென்றதாக சொல்லியுள்ளதில் நான் 17.12.2015ம் தேதி மனுதாரருடன் சந்தோசமாக உடுமலைபேட்டையில் இருந்த நிலையில் பழனியில் சண்டை வந்தது என்று பொய்யாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பர்ஸ், Tab ஐ திரும்ப பெற்று கொண்டேனா என்றால் ஆமாம், பெற்று கொண்டேன். மனுதாரர் என்னை காணவில்லை என்று பொய் புகார் கொடுத்தபின்பு நான் விசாரணைக்கு ஆஜரானேன் என்று சொல்லியுள்ளதில் அது சம்மந்தமான புகாரையோ, ரசீதையோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மனுதாரர் என்னை

காணவில்லை என்று எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றாலும் மனுதாரரின் நகைகளை நான் வாங்கி வைத்து கொண்டு திருப்பி கொடுக்கவில்லை என்று புகார் கொடுத்தார் என்றாலும் அதற்கான மனு ரசீதை மனுதாரர் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல.

6. மனுதாரர் என்ன படித்துள்ளார் என்றால் 10 வது படித்துள்ளார். மனுதாரரின் தகப்பனார் அவ்வபோது என்னிடம் பணமாக ரூபாய் 85000/- வாங்கினார் என்று சொல்லியுள்ளதில் எந்த தேதியில் வாங்கினார் என்றால் 2015 செப்டம்பர்க்கு பிறகு வாங்கினார், தேதி சரியாக ஞாபகமில்லை. மனுதாரர் கபாலி படம் பார்க்க சென்றதாக சொல்லியுள்ளது எந்த தேதி என்றால் 2016 ல் படம் வந்தது, தேதி ஞாபகமில்லை. மனுதாரர் சினிமாவிற்கு போக வேண்டும் என்று சொன்னதால் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன் என்றால் ஆமாம். மனுதாரர் அவரது அக்கா, தங்கையுடன் தான் சினிமாவிற்கு சென்றார் என்றால் சரிதான். சினிமாவிற்கு போக கூடாது என்று சொன்னதால் Charge ல் இருந்த கொசு பேட்டை எடுத்து காதில் வைத்து மின்சார தாக்குதல் ஏற்படுத்தி காயம் ஏற்படுத்தினார் என்றும் கீழே தள்ளி விலா எலும்பு காயம் ஏற்பட்டது என்று சொல்லியுள்ளதில் எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றால் வேல் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். இந்த சம்பவம் எப்போது நடந்ததாக சொல்கிறேன் என்றால் கபாலி படம் வெளி வந்த அன்றே நடந்தது. அவ்வாறு வேல் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதற்கு பிறகு ஒரு மாதம் ஓய்வு எடுத்தேன் என்றால் ஆமாம்.

7. அவ்வாறு நான் ஓய்வு எடுத்தபோது மனுதாரர் என்னுடன் தான் இருந்தார் என்றால் இல்லை. சண்டை போட்டுவிட்டு போனவர் வரவில்லை. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் நான் சொல்வது போல் செல்லபாண்டி மற்றும் நபர்கள் மூலம் பேச்சு வார்த்தை எதுவும் என்றாலும் பெரியநாயகி அம்மன் கோவிலில் வைத்து பேசவில்லை என்றாலும் சரியல்ல. நான் பழனி மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் சேர்ந்து வாழ வேண்டும் என்று மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மனுதாரரின் நகைகளை கொடுக்க கூடாது என்று ஏமாற்றுவதற்காக தான் சேர்ந்து வாழ வேண்டும் என்று மனு தாக்கல் செய்தேன்

என்றால் சரியல்ல. தற்போதும் மனுதாரர் என்னுடன் தனியாக குடுத்தனம் இருக்க வருவதற்கு தயாராக இருக்கிறார் என்பதால் நான் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன். HMOP 110/2020 சமரசம் பேசி சம்மத பத்திரம் எழுதினோம் என்றால் சரிதான். HMOP 110/2020-ஐ நான் Not Press செய்தேன் என்றால் ஆமாம். ஒரு பத்திரம் எழுதும்போது சாட்சிகள் போட்டு எழுதுவது தான் நடைமுறை என்றால் சரிதான். Ex.R2 சம்மத பத்திரத்தில் HMOP 110/2020 Not press செய்ய வேண்டும் என்றும் இரண்டாவது பத்தியில் இரண்டுபேரும் மனமொத்த விவாகரத்து செய்ய வேண்டும் என்றும் இருதரப்பு பொருட்களையும் கொடுத்துவிட்டோம் என்றும் 01.04.2022ம் தேதியன்று எழுதிய சம்மத பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த சம்மத பத்திரத்தில் பொருட்களை கொடுத்தவிட்டோம் என்று சொல்லியதில் எந்த சாட்சியும் இல்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் மூலம் பேசியது போல் நகைகளையும், பொருட்களையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

8. மேற்படி சம்மத பத்திரத்தின்படி நகைகளை திருப்பி கொடுக்கவில்லை என்பதால் தான் 01.04.2022ம் தேதி சம்மத பத்திரம் எழுதிய பிறகு 13.04.2022ம் தேதி நகைகளை திருப்பி கொடுக்கவில்லை என்று மனுதாரர் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் பொருட்களை பெற்று கொள்ள வரவில்லை, நகைகள் எதுவும் என்னிடம் இல்லை. மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை எனது அண்ணன் துணை தாசில்தாராக இருக்கும் செல்வாக்கை பயன்படுத்தி நடவடிக்கை எடுக்காமல் ஆக்கிவிட்டேன் என்றால் சரியல்ல. அதனால் தான் மனுதாரர் 10.05.2022ம் தேதி திண்டுக்கல் மாவட்ட கண்காணிப்பாளரிடம் தன்னுடைய மனுவில் எந்த புகாரும் எடுக்கவில்லை என்று புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 23.05.2022ம் தேதி பழனி DSP அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜரானேன் என்றால் சரிதான். 23.05.2022ம் தேதி பழனி DSP அலுவலகத்தில் நடந்த விசாரணையில் 5ம் எதிர்மனுதாரராகிய எனது சித்தப்பா ஆஜராகி மனுதாரரின் பொருட்களை 31.05.2022ம் தேதிக்குள் பாப்பம்பட்டியில் வந்து வாங்கி கொள்ளுங்கள் என்று எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான், 27.05.2022க்குள் பெற்று விட வேண்டும் என்று எழுதிக் கொடுத்துள்ளார்.

9. மனுதாரரும், மனுதாரர் தம்பியும் மேற்படி சொன்னதுபோல் பொருட்களை திரும்ப பெறுவதற்கு வந்தபோது நானும், மற்ற எதிர்மனுதாரர்களும் சேர்ந்து கொண்டு SP. ADSP எங்கு வேண்டுமானலும் புகார் கொடு என்றும் இந்த பொழப்புக்கு சாகலாம் என்றும் பேசி கொடிய ஆயுதங்களை காட்டி மிரட்டி அனுப்பிவிட்டோம் என்றால் சரியல்ல. நாங்கள் மிரட்டி அனுப்பியதால் மனுதாரர் தற்கொலை முயற்சி செய்து மனுதாரரை அவரது பெற்றோர்கள் தான் தடுத்தார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. நானும் மற்ற எதிர்மனுதாரர்களும் பொருட்களை கொடுக்கிறோம் என்று சொல்லி ஏமாற்றிவிட்டதால் தான் மனஉளைச்சலால் மனுதாரர் அந்த முடிவுக்கு சென்றார் என்றால் எனக்கு அந்த சம்பவம் தெரியாது. நான் எந்த வருடம் DME முடித்தேன் என்றால் 1996 ல் தேர்ச்சி பெற்றேன். 1996 ல் தேர்ச்சி பெற்று இவ்வளவு நாட்கள் அந்த துறையில் அனுபவம் கொண்டுள்ளதால் தற்போது மாதம் ரூபாய் 60000/- வருமானம் பெறும் நிலையில் இருக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு நெய்காரப்பட்டி, பாப்பம்பட்டியில் நிலம் மற்றும் வீடு உள்ளது என்றாலும் அதன் மூலம் ரூபாய் 10 லட்சம் வருமானம் வருகிறது என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கிற்காக தான் சொத்துகளை எனது தம்பி பெயரில் மாற்றி வைத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து சம்மத பத்திரம் வாங்கி கொள்வது என்றும், பொருளை ஒப்படைத்து விட்டோம் என்று எழுதியுள்ளதற்கு ஈடாக ஒப்படைத்து இருந்தால் பொருட்களை ஒப்படைத்ததற்கு ரசீது பெற்று தாக்கல் செய்திருப்பேன் என்றால் மதிப்பு மிக்க பொருட்கள் கிடையாது, பீரோ, கட்டில், பாத்திரங்கள் இருந்தது. நான் செல்வாக்கு மிக்க நபர் என்பதால் மனுதாரருக்கு எந்த ஜீவனாம்சமும் கொடுக்க கூடாது என்று நானும், மற்ற எதிர்மனுதாரர்களும் மனுதாரரை கொடுமை படுத்துகிறோம் என்றால் சரியல்ல.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2025.09.04 17:54:07 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.